NOOLAHAM FOUNDATION

# நூலக நிறுவனம்

## மாதாந்த அறிக்கை – ஒக்டோபர் 2016

வணக்கம்,

நூலக நிறுவனத்தின் 2016 ஒக்டோபர் மாத ஆவணவாக்கல் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**எண்ணிம ஆவணவாக்கம் (Digital Preservation)**

| **வகை** | **எண்ணிக்கை** | **பக்கங்கள்** |
|---|---|---|
| எழுத்தாவணங்கள் | 1705 | 28632 |
| கையெழுத்துப் பிரதி | 03 | 304 |
| ஓலைச்சுவடி | 04 | 228 |
| புகைப்படவாக்கம் | 05 | 240 |
| பக்கம் தவறியவை | 43 | 384 |
| பக்கம் சிதைந்தவை | 09 | 80 |
| மொத்தம் | **1769** | **29868** |

**எண்ணிம நூலகம் (Digital Library)**

- ஆவணவாக்கப்பட்டவற்றில் 561 ஆவணங்கள் வலைத்தளத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மிகுதி ஆவணங்கள் நவம்பர் மாத முதல் கிழமைகளில் பதிவு செய்வதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.
- ஆவணங்களின் முக்கியத்துவத்தினை உணர்ந்து பக்கங்கள் தவறிய, சிதைந்த ஆவணங்களும் மின்வருடப்பட்டன.

- மின்வருடும் போது உடையும் ஆவணங்களை புக்கைப்படக் கருவியின் மூலம் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அவை வலைத்தளத்தில் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன.

- இதழியல் தேடலினை இலகுபடுத்துவற்காக முன்னெடுக்கப்படும் அறிமுகக்குறிப்பு இணைக்கும் பணியில் இம்மாதம் 86 பத்திரிகைகளிற்கான குறிப்புக்கள் இணைக்கப்பட்டுள்ளன.

- இம்மாதம் 252 ஆவணங்களிற்கு நிர்வாக விபரத்தரவுகள் உள்ளீடு செய்யப்பட்டன.

**சேகர அபிவிருத்தி (Collections Development)**

- ஆவணவாக்கலில் காரை செ. சுந்தரம்பிள்ளை, சி. கா. செந்திவேள், க. சௌந்தரராஜன், இராமநாதன், கீதாமணி கமலேந்திரன் ஆகியோரின் சேகரிப்புக்களும், வெளியீடுகளும் சன்மார்க்க சபை சேகரிப்புக்களும் ஆவணவாக்கப்பட்டுள்ளது. ஆவணங்களைப் பகிர்ந்துகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

**ஆவணவாக்க அனுமதிகள் (Rights Management)**

- ஒக்டோபர் மாதத்தில் கீழ்வருவோர் தமது வெளியீடுகளை ஆவணவாக்குவதற்கான அனுமதியினை பதிவுசெய்துள்ளனர்.

  **வெளியீட்டாளர்கள்**

  - சிவகாமி பதிப்பகம்
  - ஈழமுரசு வெளியீடு
  - சிரித்திரன் வெளியீடு
  - ஈழநாதம் வெளியீடு
  - நமது ஈழநாடு வெளியீடு

  **எழுத்தாளர்கள்**

  - கணேசபிள்ளை, வை.
  - யோகரத்தினம், ச. (ராதேயன்)
  - நடராசா, பி. (மயிலங்கூடல் நடராசா)
  - குமாரலிங்கம், சி.
  - திருநாவுக்கரசு, செ.

## வாழ்க்கை வரலாற்றுக் களஞ்சியம்

வாழ்க்கை வரலாற்றுக் களஞ்சியம் தொகுக்கும் பணியில் முன்னர் உள்ளிடப்பட்டிருக்கும் ஆளுமை விபரங்களில் மேலதிக விபரங்களை இணைக்கும் பணி இம்மாதம் இடம்பெற்றது.

## ஆளணி (Human Resource)

நூலக நிறுவனம், ஊழியர்களுக்கான ஆறுமாத கால ஆங்கில மொழிக் கற்கை நெறி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது. இதில் ஆங்கிலம் கதைப்பதற்கும் எழுத்துவதற்கும் புலமைப்பெற்ற ஆசிரியர் ஒருவரால் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இக்கற்கை நெறிமூலம் ஊழியர்கள் தங்களது தகவல் தொடர்பு திறன் மற்றும் தன்னம்பிக்கைகளை வளர்த்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது

## வரவு செலவு அறிக்கை

- ஒக்டோபர் மாதத் தேவைகளுக்காக ரூ. 342,500.00 செலவானது. இதில் ஆளணியினருக்கான கொடுப்பனவுகள் 274,000.00 உம் உபகரணச் செலவு, வாடகை, தொலைபேசி, இணையம், போக்குவரத்து, மின்சாரம் போன்ற ஏனைய செலவுகளும் உள்ளடங்குகின்றன.
- இம்மாதம் அவுஸ்திரேலியா மற்றும் கனடா அன்பர்கள் ஊடாக நன்கொடைகள் கிடைக்கப் பெற்றன.

இலாப நோக்கற்று இயங்கும் நூலக நிறுவனம் கொடையாளர்களின் நன்கொடையிலேயே இயங்கி வருகிறது. அவ்வகையில் நன்கொடை வழங்கிய அனைவருக்கும் எமது நன்றிகள். தொடர்ந்தும் எம் பணிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி.